**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண்:557** **நாள்: 08.10.2026**

**மாண்புமிகு மத்திய சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் திரு. ஜே.பி. நட்டா அவர்கள், தலைநகர் டில்லியில் TB முக்த் பாரத் அபியான் (TBMBA) எனும் இயக்கத்தினைத் இன்று தொடங்கி வைத்ததைத் தொடர்ந்து, பெருநகர சென்னை மாநகராட்சியின் துணை ஆணையாளர் திரு.தாக்கரே சுபம் ஞானதேவ்ராவ், இ.ஆ.ப., அவர்கள், இந்த இயக்கத்தினை மாநகராட்சியில் தொடங்கி வைத்தார்.**

இன்று (08.10.2026) மாண்புமிகு மத்திய சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் திரு. ஜே.பி. நட்டா அவர்கள், தலைநகர் டில்லியில் TB முக்த் பாரத் அபியான் (TBMBA) என்னும் இயக்கத்தினைத் தொடங்கி வைத்ததைத் தொடர்ந்து, பெருநகர சென்னை மாநகராட்சியின் துணை ஆணையாளர் திரு.தாக்கரே சுபம் ஞானதேவ்ராவ், இ.ஆ.ப., அவர்களால், இந்த இயக்கம் மாநகராட்சியில் தொடங்கி வைக்கப்பட்டு, இத்திட்டம் குறித்து மாநகராட்சி சுகாதாரத் துறை அலுவலர்களுக்கு அறிமுகப் பயிற்சிக் கூட்டம் ரிப்பன் கட்டட அலுவலகக் கூட்டரங்கில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாநகர நல அலுவலர் டாக்டர் எம்.ஜெகதீசன், மாநகர மருத்துவ அலுவலர் டாக்டர் ஜெயலட்சுமி, மாநகராட்சியின் காச நோய்திட்ட அலுவலர் டாக்டர் ஜெ.லாவண்யா மற்றும் அலுவலர்கள், மாவட்ட இளைஞர் அலுவலர், தன்னார்வ தொண்டு நிறுவனத்தினர் உள்பட கலந்து கொண்டனர்.

இத்திட்டத்தில், காசநோயாளிகளுக்கு ஊட்டசத்து உள்ள உணவு பெட்டகங்கள் வழங்கி உதவி புரிந்த 5 தன்னார்வ தொண்டு நிறுவனங்களான ஸ்ரீ சத்ய சாய் டிரஸ்ட், மிஸ்பா சாரிடபுள் டிரஸ்ட், யுனிடேட் வே ஆப் சென்னை, கோரமண்டல் இன்டர்நேஷல் லிமிடெட் மற்றும் சியர்ஸ் ஆகியவற்றிற்கு பாராட்டுச் சான்றிதழ்களை வழங்கினார்.

இக்கூட்டத்தில் தேசிய காசநோய் ஒழிப்புத் திட்டத்தின் (NTEP) தற்போதைய முயற்சிகளுக்கு வலுசேர்க்கும் வகையில், காசநோய் குறித்த விழிப்புணர்வு, மக்களிடையே சென்றடையும் நடவடிக்கைகள் மற்றும் களநிலைப் பங்கேற்பை வலுப்படுத்தல் இம்முன்னெடுப்பின் நோக்கமாகும்.

தேசிய அளவிலான தொடக்கத்துடன் இணைந்து, பெருநகர சென்னை மாநகராட்சியில் 'காசநோய் இல்லா பாரதப் பிரசாரம்' (TB Mukt Bharat Abhiyaan) மற்றும் 'ஜோஷ்' (JOSH) திட்டம் தொடங்கப்பட்டு, இதற்காக ஒவ்வொரு மண்டலத்திலும் 'காசநோய் இல்லா பாரதப் பிரசாரக் குழு' அமைக்கப்பட்டுள்ளது. இக்குழுவின் தலைவராக மண்டல அலுவலரும், ஒருங்கிணைப்பாளராக மண்டல சுகாதார அலுவலரும் செயல்படுவர். மண்டல மருத்துவ அலுவலர், செயற் பொறியாளர், தேசிய காசநோய் ஒழிப்புத் திட்டத்தின் (NTEP) மூத்த சிகிச்சை மேற்பார்வையாளர், 5 'மை பாரத்' (My Bharat) தன்னார்வலர்கள் மற்றும் 5 என்.சி.சி (NCC) மாணவர்கள் இதன் உறுப்பினர்களாக செயல்படுவர்.

**செய்தி வெளியீடு: இணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி**